[1974 சனவரி 25

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஏன் முழுச் செலவையும் ஏற்றுக்கொள்ளக் கூடாது? என்று கேட்டால்தான் பொருத்தமாக இருக்குமே தவிர, ஆய்வுச் செலவை மட்டும் ஏற்றுக்கொள்ளுங்கள் என்று கேட்பது அவ்வளவு பொருத்தமாக இருக்காது. மூக்கணாங் கயிறு செலவையா அரசு ஏற்றுக் கொள்ளவேண்டும் என்று கேட்பது? மாடு வாங்குவதற்கு ஆகும் செலவை ஏன் அரசு ஏற்றுக்கொள்ளக்கூடாது? என்று கேட்பதுதான் பொருத்தமாக இருக்கும்.

*158 **வினா—திரு. பெ. சௌந்தரபாண்டியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:—

(அ) மணப்பாறை நகருக்கு காவிரியிலிருந்து குடிதண்ணீர் கொண்டு வரவேண்டும் என மாவட்ட வளர்ச்சி மன்றம் பரிந்துரை செய்துள்ளதா?

(இ) ஆம் எனில், அரசு அதன் மீது என்ன முடிவு எடுத்துள்ளது?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) இல்லை.

(இ) இக்கேள்வி எழவில்லை.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, திருச்சியில் உள்ள மாவட்ட வளர்ச்சி மன்றம் ஒரு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பியது. இது எனக்கும் தெரியும். இல்லை என்பதற்கு என்ன காரணம் என்று தெரியவில்லை. இனிமேலாவது பரிசீலனை செய்து, தீர்மானம் நிறைவேற்றியிருக்கிறதா என்பதைக் கண்டுபிடிக்க முடியுமா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: காரியம் தான் முக்கியமே தவிர, வீரியம் முக்கியம் அல்ல என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அதைப்போல, இங்கே கேட்கப்பட்டிருக்கிற கேள்வி "மாவட்ட வளர்ச்சி மன்றம் பரிந்துரை செய்துள்ளதா?" என்பதாகும். பரிந்துரை செய்து அனுப்பியிருந்தால்தான் அரசாங்கத்திற்குத் தெரியும். மாவட்ட ஆட்சியாளரைக் கேட்டபோது, மாவட்ட வளர்ச்சி மன்றத்திலே பரிந்துரை எதும் செய்யப்

1974 சனவரி 25]

படவில்லை என்று அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால், அதற்காக இந்தப் பிரச்சினை மூடப்படவில்லை. இந்தப் பிரச்சினை மணப்பாறை நகராட்சி மன்றம் கேட்டுக்கொண்ட அடிப்படையில் வெவ்வேறு கட்டத்தில் பரிசிலிக்கப்பட்டிருக்கிறது. மணப்பாறைப் பகுதிக்குக் குடிநீர் வழங்கும் பிரச்சினை இதிலே இல்லை என்று சொல்லப் படவில்லை. தீர்மானம் போட்டு, மாவட்ட வளர்ச்சி மன்றத்திலிருந்து வராத காரணத்தால் அங்கே பரிந்துரை செய்யப்பட வில்லை என்று மாவட்ட ஆட்சியாளர் தெரிவிக்கும் போது அதைத்தான் நாங்கள் ஆதாரபூர்வமாக எடுத்துக்கொள்ள வேண்டும்.

திரு. கு. காமாட்சி: மாவட்ட வளர்ச்சி மன்றம் தீர்மானம் போடவில்லை என்றாலும், மணப்பாறை வறண்ட பகுதி, குடிநீருக்கு மக்கள் கஷ்டப்படும் பகுதி என்பது தெரிந்ததே, காவிரியிலிருந்து கொண்டுவராவிட்டாலும், பக்கத்தில் ஓடும் காட்டாற்றில் கிணறு அமைத்து, அதிலிருந்து குடி தண்ணீர் வழங்குவதற்காவது ஏற்பாடு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவர் அவர்களே, காவிரியிலிருந்து தண்ணீர் கொண்டுவருகிற திட்டம் ஆய்வு செய்யப்பட்டது. 40 கிலோ மீட்டர் தூரம் தண்ணீர் வரவேண்டும். அதற்கு ஆகும் செலவு ரூ. 100.85 லட்சம் என்றும், இதற்குப் பராமரிப்புச் செலவு ஆண்டுக்கு ரூ. 3.06 லட்சம் என்றும் மதிப்பிடப்பட்டது. இதன்படி 1,000 லிட்டர் குடிநீர் வழங்குவதற்கு 0.93 பைசா நடைமுறைச் செலவு ஆகிறது. இந்த செலவை மணப்பாறை நகராட்சி மன்றம் ஏற்றுக்கொண்டு நடைமுறைப்படுத்துவது கடினம் என்று கருதப்பட்டது. மற்றொரு திட்டம் ஆலோசிக்கப்பட்டது. அந்தத் திட்டத்திற்கு நிர்மாணச் செலவு எண்பது லட்ச ரூபாய், பராமரிப்புச் செலவு ரூ. 74,000 என்றும், இதன்படி ஆயிரம் லிட்டருக்கு 52 பைசா செலவாகும் என்றும் புள்ளி விவரம் தெரிவிக்கிறது. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஒரு ஓடையிலிருந்து தண்ணீர் கொண்டுவரவேண்டியிருப்பதால் பாசன தலைமைப் பொறியாளரின் அனுமதி கோரப்பட்டுள்ளது. ஏனென்றால், வேறு சிலர் பாதிக்கப்படுவோம் என்று விண்ணப்பங்கள் செய்திருக்கிறார்கள். பல்வேறுவிதமான வேண்டுகோள்களுக்கிடையே பொருத்தமான முடிவை அரசு செய்ய ஆலோசனை நடத்தி வருகிறது.